بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/03/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

மார்ச் 23 ஆம் தேதி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கான அடிக்கல் வைக்கப்பட்ட நாளாகும். மார்க்கத்தை புதுப்பிக்கவும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகில் நிலைநாட்டவுமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) தோன்றினார்கள் என்ற இவ்விஷயத்தை ஒவ்வொரு வருடமும் இந்நாள் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔ بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾
مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

هُوَ الَّذِيۡ بَعَثَ فِي الۡأُمِّيّٖنَ رَسُوۡلًا مِّنۡهُمۡ يَتۡلُوۡا عَلَيۡهِمۡ اٰيٰتِهٖ وَيُزَكِّيۡهِمۡ وَيُعَلِّمُهُمُ الۡكِتٰبَ وَالۡحِكۡمَةَ ٭ وَإِنۡ كَانُوۡا مِنۡ قَبۡلُ لَفِيۡ ضَلٰلٍ مُّبِيۡنٍ ﴿۳﴾
وَّاٰخَرِيۡنَ مِنۡهُمۡ لَمَّا يَلۡحَقُوۡا بِهِمۡ ؕ وَهُوَ الۡعَزِيۡزُ الۡحَكِيۡمُ ﴿۴﴾

“அவனே எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான். மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமைமிக்கவனும், நுண்ணறிவுள்ளவனும் ஆவான்.” (திருக்குர்ஆன் 62: 3,4)

இரண்டு மூன்று நாட்களுக்கு முன், மார்ச் 23 ஆம் தேதி கடந்தது. அந்நாளில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கான அடித்தளமிடப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் - திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிவிப்புகளுக்கேற்ப, அன்னார் மார்க்கத்தை புதுப்பிக்கவும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகில் நிலைநாட்டவும் வந்தார்கள் என்பதை ஒவ்வொரு வருடமும் இந்த நாள் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும். அன்னாருடைய பைஅத்தில் இணைந்து விட்டதாக நாம் வாதிக்கிறோம். ஆகவே இந்த முக்கிய பணியை செய்து முடிக்க நாமும் நமது திறன்களுக்கேற்ப இதில் பங்கெடுக்க வேண்டும். மேலும் திசைமாறிச் சென்ற மனிதத்தொடர்பை இறைவனுடன் இணைக்க வேண்டும்; பரஸ்பரம் உரிமைகளை செலுத்துமாறு அடியார்களுக்கு கவனமூட்ட வேண்டும். இதற்காக முதலில் நாம் நம்மை சீர்திருத்துவது அவசியமாகும்.

இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன். அவற்றில் அன்னாரது வருகையின் அவசியம், நோக்கம் மற்றும் முந்தைய முன்னறிவிப்புகள் குறித்து குறிப்புகள் உள்ளன. இவற்றிலிருந்து அன்னாரின் உண்மைத்துவத்திற்கான சான்று கிடைக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், சஹாபாக்களிடம் தோன்றிய தூய மாறுதல்களைக் போன்று (தமது) ஜமாஅத்தில் தோன்றயிருக்கும் தூய மாறுதல்களைக் குறித்து கூறியுள்ளார்கள். மேலும் சஹாபாக்கள் எவ்வாறான துன்பங்களை கடந்தார்களோ அவ்வாறான துன்பங்களை (தமது) ஜமாஅத் கடக்கும் என்று கூறியுள்ளார்கள். ஜமாஅத் என்ற அடிப்படையில் நாம் முன்னேறக் கூடியவர்களாக இருப்பதற்கு எப்போதும் இவ்விஷயங்களை நமக்கு முன் வைக்க வேண்டும்.

**நான் ஓதிய வசனங்களைக் குறித்து விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘இந்த வசனத்தின் கருத்தாவது, அறிவு மற்றும் ஞானத்தை விட்டு மக்கள் பேரிழந்தவர்களாக ஆகிவிட்ட நேரத்தில் இறைவன் தூதரை அனுப்பினான். அந்த தூதர் அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்தினார். வேதத்தின் அறிவையும், ஞானத்தையும் கொண்டு அவர்களை நிரப்பினார். இறுதிக் காலத்தில் தோன்றும் இன்னொரு கூட்டமும் உள்ளது. அவர்களும் தொடக்க காலத்தில் இருள் மற்றும் வழிகேட்டில் இருப்பார்கள். கல்வி, ஞானம் மற்றும் நம்பிக்கையை விட்டு வெகு தொலைவில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபாக்களின் பண்பில் கொண்டு வருவான். எந்த அளவுக்கு என்றால், அவர்களின் உண்மைத்துவம் மற்றும் நம்பிக்கை சஹாபாக்களின் உண்மைத்துவம் மற்றும் நம்பிக்கைக்கு ஒப்பானதாக ஆகிவிடும்.’’

ஆகவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்த பிறகு அன்னாரது உண்மைத்துவம் குறித்து நமக்கு எவ்வாறான நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றால், இறைவன் மீதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் சஹாபாக்கள் வைத்திருந்த நம்பிக்கையைப் போன்று நமக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். தற்காலத்தில் நான் சஹாபாக்களைக் குறித்து குத்பாக்களில் எடுத்துரைத்து வருகிறேன். நமக்கு முன்னால் உதாரணங்கள் உள்ளன. அவ்வாறு நாம் இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘சஹீஹான ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கம் அளிக்கும் போது, சல்மான் ஃபார்சி அவர்களின் தோளின் மீது கை வைத்தவாறு, கார்த்திகை நட்சத்திரம் வரை ஈமான் சென்று விட்டாலும் பாரசீக வம்சத்தைச் சார்ந்த ஒரு நபர் அதை திரும்பக் கொண்டு வருவார் என்று கூறினார்கள். இறுதிக் காலத்தில் திருக்குர்ஆன் வானத்திற்கு உயர்த்தப்பட்டுவிடும் என்று எழுதப்பட்டுள்ளது. இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும். சிலுவை தாக்குதல் - தஜ்ஜாலிய தாக்குதல் என்றும் அது அழைக்கப்படுகிறது. அந்த தஜ்ஜாலிய தாக்குதல் காலத்தில் அநேக அப்பாவிகள் ஓர் இறைவனை விட்டு விடுவார்கள் என்றும், அநேக மக்களின் ஈமானிய நேசம் குளிர்ந்துவிடும் என்றும் எழுதப்பட்டுள்ளது. அப்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பெரும்பணி ஈமானை புதுப்பிப்பதாக இருக்கும். அவருடைய ஜமாஅத்தைக் குறித்தே وَّاٰخَرِيۡنَ مِنۡهُمۡ لَمَّا يَلۡحَقُوۡا بِهِمۡ ‘மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்கள்’ என்று வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், முழுமையான இருளுக்குப் பிறகு நேர்வழி மற்றும் ஞானத்தை பெறக்கூடியவர்கள் இரு கூட்டத்தார் மட்டுமே ஆவார்கள். முதலாமவர்கள் யாரென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சஹாபாக்களாவார்கள். இரண்டாவது கூட்டத்தினர், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டமாகும். ஏனென்றால் இந்த கூட்டத்தாரும் சஹாபாக்களைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களைக் காணக் கூடியவர்களாக இருப்பார்கள்..... 1300 வருடங்களுக்கு பிறகு இன்று மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அற்புதத்தின் வாசல் திறந்து விட்டது. ரமலான் மாதத்தில் சூரிய சந்திர கிரகணங்கள் தோன்றியதை மக்கள் தமது கண்களால் கண்டனர். மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் வெளிப்படும் என்று முன்னறிவிக்கப்பட்ட வால் நட்சத்திரம் வெளிப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் அதைக் கண்டனர். இதேபோன்று ஜாவாவில் வெளிப்பட்ட நெருப்பையும், பிளேக் பரவியதையும், ஹஜ்ஜை விட்டு தடுக்கப்பட்டதையும், நாட்டினுள் இரயில் ஆயத்தமாகி இருப்பதையும், ஒட்டகங்கள் பயனற்று போனதையும் மக்கள் கண்டனர். இவை அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களாகும். முன்னறிவிக்கப்பட்டது போன்றே இந்த அற்புதங்கள் இக்காலத்தில் கண்டுணரப்பட்டன.

நம்முடைய ஜமாஅத் சஹாபாக்களுடன் ஒப்புமை பெற்றுள்ளது. சஹாபாக்கள் பார்த்தது போன்றே அவர்களும் அற்புதங்களையும், அடையாளங்களையும் காண்கின்றனர். சஹாபாக்கள் அனுபவித்தது போன்றே இறைவழியில் மக்களின் கேலி கிண்டல்கள், ஏச்சுப்பேச்சுகள், உள்ளத்தை காயப்படுத்தும் பல்வேறு வகையான சொற்கள், தீய வார்த்தைகள் போன்றவற்றின் துன்பத்தை அவர்களும் அனுபவிக்கின்றனர்.

அவர்களில் பெரும்பாலார் தொழுகையில் அழுகின்றனர்; சஜ்தா செய்யுமிடங்களை கண்ணீரால் நனைத்து விடுகின்றனர். அவர்களில் பெரும்பாலாருக்கு உண்மையான கனவுகள் வருகின்றன. மேலும் அவர்கள் இறை அறிவிப்பை பெறக் கூடியவர்களாக இருக்கின்றனர். சஹாபாக்கள் செலவழித்தது போன்றே அவர்களில் பெரும்பாலார் தாம் உழைத்து சம்பாதித்த செல்வத்தை இறைவிருப்பத்திற்காக செலவழிக்கின்றனர். சுருக்கமாக ஆகரீன மின்ஹும் என்ற சொல்லிலிருந்து உணரப்படுகின்ற அந்த அனைத்து அடையாளங்களும் இந்த ஜமாஅத்தில் காணப்படுகிறது.

இக்காலத்தில் பல்வேறு பிரிவுகளை ஒரே சமுதாயமாக ஆக்க இறைவன் நாட்டம் கொண்டுள்ளான். மார்க்கச் சண்டைகளை முடிவுக்கு கொண்டு வந்து, அனைவரையும் ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்க இறைவன் நாட்டம் கொண்டுள்ளான். இந்த இறுதிக் காலத்தைக் குறித்து திருக்குர்ஆனில் இன்னும் பல அடையாளங்கள் எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக நதிகள் வெளிப்படும், புவி அறிவியல் மற்றும் கனிம வளங்கள் வெளிப்படும், ஒட்டகங்கள் பயனற்றுப்போகும், நூல்கள் பெருமளவில் அச்சடிக்கப்படும், சந்திப்பின் எளிய வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படும், சூரிய சந்திர கிரகணங்கள், பிளேக் பரவுதல் போன்றவை. அறிவுடையோருக்கு இது தெளிவான, ஒளிமிக்க பாதையாகும். திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ள அனைத்து அடையாளங்களும் எனது வருகைக்காக வெளிப்பட்டுவிட்ட காலத்தில் இறைவன் என்னை அனுப்பியுள்ளான்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய வாதம் குறித்து கூறுகிறார்கள்:** ''நான் மிகச் சரியான நேரத்தில் தோன்றியவன் ஆவேன். அடையாளங்களை வெளிப்படுத்துவதில் என்னுடன் போட்டியிட்டு என்னை மிகைக்க, இப்பூமியில் உயிருடன் யாரேனும் உள்ளாரா என்ன? எந்த இறைவனுடைய கையில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! இப்போது வரை என் மூலமாக இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன. மேலும் ஏறக்குறைய பத்தாயிரத்திற்கு குறைவான மக்கள், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கனவில் கண்டுள்ளனர்; மேலும் அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னை உண்மைப்படுத்தியுள்ளார்கள்.

உண்மையான விஷயம் என்னவென்றால், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வேலை அவர் சண்டைகளின் தொடரை முடிவுக்கு கொண்டு வருவார் என்பதாகும். மேலும் அவர் எழுதுகோல், துஆ மற்றும் சிந்தனையின் மூலமாக இஸ்லாத்தின் புகழை ஓங்கச் செய்வார். இவ்விஷயம் மக்களுக்கு புரியவில்லை என்பதில் பரிதாபமே! ஏனென்றால் உலகின் பக்கம் எந்த அளவுக்கு கவனம் உள்ளதோ அந்த அளவுக்கு மார்க்கத்தின் பக்கம் கவனம் இல்லை. உலகின் கறைகள் மற்றும் அசுத்தங்கள் ஆகியவற்றில் மூழ்கிய பிறகு, அவர்களின் மீது திருக்குர்ஆனின் ஞானங்கள் திறக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது எங்கனம் சாத்தியமாகும்!

எனது வருகையின் நோக்கம் மற்றும் குறிக்கோள், இஸ்லாத்தை புதுப்பிப்பது இஸ்லாத்திற்கு ஆதரவளிப்பது மட்டுமேயாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது ஷரீஅத் மற்றும் நுபுவ்வத் முற்றுப் பெற்று விட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நன்மைகள், அருள்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள், வழிகாட்டல்கள் ஆகியவை இன்னும் முற்றுப் பெற்று விடவில்லை. முஸ்லிம்களின் வீழ்ச்சி மற்றும் பலவீனத்தின் காலத்தில்

அவர்களுக்கு ஆதரவளித்து கண்காணிக்கும் பொருட்டு இறைவன் என்னை அனுப்பியுள்ளான்.''

**எதிரிகள் தமக்கு எதிராக மேற்கொள்ளும் ஆணவ நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகிறார்கள்:** ''எனது பெயர் தஜ்ஜால் என்றும் பெரும் பொய்யன் என்றும் வைக்கப்படுகிறது; என் மீது அவதூறுகள் சுமத்தப்படுகின்றன. இதைக் கண்டு எனக்கு வருத்தமில்லை! ஏனென்றால் எனக்கு முன்னுள்ள தூதர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்களோ அவ்வாறே என்னுடனும் நடந்து கொள்ளப்படுவது அவசியமாகும். நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழியில் வந்த சோதனைகள் மற்றும் கஷ்டங்களில் சிறிதளவு கூட நான் அனுபவிக்கவில்லை.

இஸ்லாத்தை வெற்றிகரமாக ஆக்கக்கூடிய வழிமுறைகளையும், பிற மார்க்கங்களின் மீது மிகைக்கச் செய்யும் வழிமுறைகளையும் நான் முழுமையாக எடுத்து வைத்து விட்டேன். இறைவன் மீது நான் ஆணையிட்டு கூறிய பிறகும், எனக்கு ஆதரவாக அவன் வெளிப்படுத்திய அடையாளங்களைக் கண்ட பிறகும் நீங்கள் என்னை பெரும் பொய்யன் என்றும் இட்டுக் கட்டுபவன் என்றும் கூறினால், பிறகு இறைவன் மீது ஆணையிட்டு நான் உங்களிடம் கூறிக்கொள்கிறேன்! இறைவன் உதவி ஒத்தாசை செய்துவரும் ஏதேனும் ஒரு பொய்யனின் உதாரணத்தை நீங்கள் எடுத்துக் காட்டுங்கள். **இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறுகிறேன்! நான் உண்மையாளன் ஆவேன்.** ஒவ்வொரு வழக்கிலும் ஒவ்வொரு சோதனையிலும் அவன் எனக்கு உதவுகின்றான். மேலும் இலட்சக்கணக்கான மக்களுடைய உள்ளங்களில் எனது நேசத்தை அவன் ஏற்படுத்தி விட்டான்.

தற்போது வானத்திலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும் ஒளிகளையும், அருள்களையும் முஸ்லிம்கள் மதிக்க வேண்டும்! தகுந்த நேரத்தில் உதவி செய்யப்பட்டதற்காக அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். நான் மிக வலுவுடனும், முழு நம்பிக்கையுடனும், அகப்பார்வையுடனும் கூறுகிறேன். பிற மார்க்கங்களை அழித்து, இஸ்லாத்தை மிகைக்கச்செய்து, ஆற்றல் வழங்கிட அல்லாஹ் நாடியுள்ளான்.

**நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுதாயத்தைச் சார்ந்தவனாக இல்லாமல் இருந்திருந்தால், மேலும் அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பின்பற்றாமல் இருந்திருந்தால், உலகின் அனைத்து மலைகள் அளவிற்கும் எனது நற்செயல்கள் இருந்திருந்தாலும்கூட இறைவனுடன் உரையாடும், சம்பாஷணை செய்யும் இந்த நற்பேறு ஒருபோதும் எனக்கு கிடைத்திருக்காது. ஏனென்றால் முஹம்மதிய நுபுவ்வத்தைத் தவிர மற்ற அனைத்து நுபுவ்வத்தும் மூடப்பட்டு விட்டன.**

இறைவன் மற்றும் அவனுடைய படைப்பினங்களுக்கு இடையிலான தொடர்பில் விரிசல் ஏற்பட்டு விட்டது. அதை அகற்றிவிட்டு அன்பு மற்றும் தூய்மை ஆகியவற்றின் உறவை மீண்டும் நிலைநாட்டவே இறைவன் என்னை நியமித்துள்ளான்.''

உலகில் வசிப்பவர்கள் - குறிப்பாக முஸ்லிம்கள் இந்த உண்மையை உணரக் கூடியவர்களாகவும், அன்னாருடைய வாதத்தை புரியக் கூடியவர்களாகவும் ஆக வேண்டும். மேலும் விரைவில் அவர்கள் மஸீஹ் மற்றும் மஹ்தியின் பைஅத்தில் இணைந்து விடக்கூடியவர்களாக ஆகவேண்டும். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

*ஹுஸூர் அவர்கள் குத்பாவின் இறுதியில் பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காக துஆ செய்யும்படி அறிவித்தவாறு கூறினார்கள்*: பாகிஸ்தானில் ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு சம்பவம் நடைபெற்று விடுகின்றது. அவ்வாறே அல்ஜீரியாவிலும் சில அரசாங்கத்தினரின் எண்ணம் நல்லதாக இல்லை. உலகின் ஒவ்வொரு நாட்டில் வாழும் ஒவ்வொரு அஹ்மதியையும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைப்பானாக! மேலும் அத்துடன் அஹ்மதிகளும், முன்பை விட அதிகமாக இறைவனின் பக்கம் குனியக் கூடியவர்களாகவும், அடியார்களின் உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாகவும் ஆக வேண்டும். இவற்றின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது)